THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

OF BOOKS
23 JUN 1955
MADRAS

May, 1955

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

மே, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:—A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா

மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர்:—சங்கை C. P. ஹைனமென், லினுக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கம்
5. இரக்ஷணிய யாத்திரீகம் காட்டும் வழி
6. வேத வினாக்களுக்குரிய விடைகள்.
7. இயேசுவின் ஜெயப்பள்ளி.
8. கி.மு. சங்கப் பொருட்கள்.
9. வேத வினாக்கள்.
10. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, மே 1955 இலக்கம் 7

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்.

தல்லாகுளம், மதுரை,
ஏப்ரல் 16, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

நேற்று நமது அத்தியட்சாதீன நிர்வாகக் கமிற்றிக்கூட்டங்கள் முடிவடைந்தன. அங்கே அநேக முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் நான்கைப்பற்றி மாத்திரம் சுருக்கமாய்க் கூறுகிறேன்:-

1. *ஓய்வுநாள் நமது சபை அங்கத்தினரால் துர்ப்பிரயோகம் செய்யப்படுவதைப்பற்றியும் ஓய்வுநாளில் கிறிஸ்தவ ஆசிரியர் லௌகீக அலுவல்களான கூட்டங்களில் ஆஜராகவும், தேர்தல்களில் பங்கெடுக்கவும் இதைப் போலொத்த இதர காரியங்களில் ஈடுபடவும் நெருக்கப்படுவதைக் கேட்டுக் கலக்கமுற்றனர். இது ஓர் முக்கிய விடயமென நிர்வாகக் கமிற்றி கருதி இதைப்பற்றி திருச்சபையாக நாம் யாது செய்யலாமென ஆலோசிக்க ஓர் கமிற்றியை நிறுவினர்.*

2 *மதுரையில் அத்தியட்சாலயம் கட்டுவதற்குரிய இடம் ஒன்று கண்டுபிடிக்க வெகுகாலம் பிரயாசப்பட்டு வருகிறோம். முழு அத்தியட்சாதீனத்திலும் ஆராதிப்பதற்கு மையமாய் விளங்கக்கூடியதும், இந்தப் பெரிய பட்டினத்தில் கடவுளுக்கு சாட்சியாயிருக்கக்கூடியதுமான ஒரு மகத்துவமான ஆலயம் நமக்குத் தேவை. அதற்குரிய இடத்தைக் கண்டுபிடிக்க புதிய முயற்சி எடுக்கும்படியும் அத்தியட்சாலயம் கட்டுவதற்குரிய ஒழுங்கு செய்யும்படியும் ஓர் கமிற்றி நியமிக்கப்பட்டது.*

3. *நமது இரண்டு ஜில்லாக்களிலும் முக்கியமாய் இராமநாதபுரம் ஜில்லாவிலும் 5 வருட தேசீய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சர்க்கார் நடத்திவரும அபிவிருத்தித் திட்டஙகளில் நாம் ஒரு சபையாக எவ்விதம் பயன்படத்தக்கவிதமாய் அவர்களோடு ஒத்துழைக்கலாம் என்பதை ஆலோசிக்க ஓர் கமிற்றியை நிர்வாகக் கமிற்றி நியமித்தது.*

4. *தற்கால இளைஞர் மனதிலெழும்பும் அநேக கேள்விகளுக்கு மாறுத்தரம் அளிக்கத்தக்க விதத்தில் நூல்கள் அதிகத் தேவை என்பதை நிர்வாகக் கமிற்றிமார் உணர்ந்து அதற்காக முழு நேரத்தையும் செலவழிக்*

கக்கூடிய நூலாசிரியர் நியமிக்கப்படவேண்டுமென்ற தீர்மானத்தை ஒப்புக்கொண்டு பசுமலை ஆசிரியர் கனம் வி. ஜெயராஜ் அவர்களை நியமித்திருக்கிறார்கள்.

நம் நாட்டில் க்ஷேமம் பிரயல்யப்பட மேற்கூறிய ஒழுங்குகளைக் கடவுள் உபயோகப்படுத்தும்படி நீங்கள் ஜெபிப்பீர்களென நம்புகிறேன்

வருகிற மாதம் உங்களிலனேகர் இளைப்பாறவும் விடுமுறை நாட்களைக் கழிக்கவும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட இளைப்பாறுதல் கடவுளிடமிருந்து நாம் நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ளவேண்டிய ஓர் நல்ல ஈவு. நல்ல இளைப்பாறுதலும் புசிப்பாறுதலும் நீங்கள் அனுபவிக்கும்படி நான் ஜெபிப்பேன். எப்போதும வேலை செய்துகொண்டேயிருக்கவேண்டுமென்பது கடவுளின் விருப்பமல்ல. நாம் சிருஷ்டிக்கப்பட்டதின் உன்னத நோக்கம் அவரைச சேவிக்கவே எப்படிச் சேவிக்கலாம் என கற்றுக்கொள்வதற்கு ஒரு வழி அவருடைய நல்ல ஈவுகளை நன்றியறிதலோடு பெற்றுக்கொள்வதேயாம். கடவுளின் நன்மைகளை அதிகமாய் விளங்கிக்கொண்டவர்களாய் விடுமுறை நாட்களிலிருந்து நீங்கள் யாவரும் திரும்புவீர்களென நம்புகிறேன்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,

லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

திருச்சபைச் செய்திகள்

1 சபையின் திருநாட்கள்,

ஜூன்	5	திருத்துவ திருநாள்
	12	திரி. திரு பின் ஞாயிறு 2
	19	„ „ 3
	24	பரி யோவான் ஸ்நானகனின் திருநாள்
	26	திரி. திரு. பின ஞாயிறு 4
	29	பரி. பேதுருவின் திருநாள்

2. சுயேட்சை ஊழிய குருமார் பயிற்சி

அத்தியட்சாதீன நிர்வாகக் கமிற்றியின் தீர்மானப்படி கல்விமங்கயத்தில் எப்ரல் 15—25உ வரை பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. ஆறு பேர் குடும்பத்தோடு வந்து பயிற்சி பெற்றார்கள். இம்மாதிரி பத்து நாட்களாக வருடம் மும்முறை பயிற்சி முகாம் மூன்று வருடங்கள் நடைபெறும். அதன் பின் தகுதிவாய்ந்தவர்களுக்குக் குருப்பட்டம் கொடுப்பதாக ஆலோசனையிலிருந்து வருகிறது.

3. அத்தியட்சாதீன நிர்வாகக் கமிற்றி.

இக்கமிற்றியும் இதர கமிற்றிகளும் மார்ச்சு, எப்ரல் மாதங்களில் நடைபெற்றன அத்தியட்சாதீனம் செய்துவரும் பல ஊழியங்களில் வளர்ச்சி காணப்பட்டது இன்னும் வளரவேண்டிய விடயங்களில புது ஆலோசனைகள் கூறப்பட்டன. முக்கியமாய் திருச்சபையில் புத்துயிர் காணப்படவேண்டியதவசியமெனவும், ஏற்கனவே கடந்த செப்டம்பரில் நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படவேண்டிய தெனவும் எடுத்துக்காட்டப்பட்டது.

4. அகில இந்திய கிறிஸ்தவப் பொருளாதார விருத்தி விசாரணை மகா நாடும் தமிழ்நாட்டுக் கமிட்டியின ஒத்துழைப்பும்

சென்ற 1954ம் வருஷம் நாகபுரியில் நடந்த அகில இந்திய கிறிஸ்தவ பொருளாதார விருத்தி கமிட்டி கூட்டத்தில் (Meeting of the Central Economic Life Committee of the National Christian Council) திருச்சபை அங்கங்களாக இலட்சக்கணக்கான கிறிஸ்தவ மக்களின் பொருளாதார நிலை மிகவும் கேவலமான நிலையில இருக்கிறது என்று கண்டு இந்த நிர்ப்பந்த நிலையிலிருந்து அவர்களை மீட்க இந்தியத் திருச்சபைகள் என்ன செய்து வருகின்றன, அவர்கள் இவவிதத் திருப்பணிகள் மூலமாய் வருஷா வருஷம் எத்தனை சத விகிதம் தங்கள சபையார் நலத்துக்கு வழிசெய்து இருக்கிறார்கள், எவ்வெவ வகைகளில் ஊழியம் செய்யப்படுகின்றன, அது விஷயத்தில் கிறிஸ்தவ சமுதாயம், சீர்பட குடி அரசாட்சியான கவன்மெண்டார், மேல் நாட்டுத் தாய்ச்சபை கள், இந்திய திருச்சபைகள் இனிவரும நாட்களில் செய்யவேண்டியவை யாவை, அவவித முன்னேற்ற வேலைகளுக்கு தற்சமயம் உள்ள சாதக பாதங்கள் எவை, இந்து ஹரிஜன முன்னேற்றத்துக்கும், அதே சமுதாயங் களிலிருந்து கிறிஸ்துவின் திருச்சபையைச் சேர்ந்துள்ள கிறிஸ்தவர்களுக் கும சமுதாய அபிவிருத்தி, பொருளாதாரநிலை உயர்வு இவைகளிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் என்ன என்று இவவாறான பல காரியங்களை அலசிப் பார்த்து தீவிரமாக வழி வகைகளை வகுக்க அகில இந்தியக் கிறிஸ்தவ மகாநாடு இவ்வருஷம் பிற்பகுதியில் நடத்தவேண்டுமென்று தீர்மானித் தார்கள். அதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டி மும்முரமாய் வேலை செய்து வருகிறது. அந்தப் பெரிய கூட்டம் செயலளவில் நல்லபலன் தரவேண்டுமானால் அகில இந்திய கிறிஸ்தவ கௌன்ஸிலோடு இணைக்கப் பட்ட அநேக கிளை கௌன்சில்கள், திருச்சபைகள் தனித்தனி மகாநாடுகள் கூட்டியோ, அல்லது சபைகளில் அவைகளைப்பற்றி பிரஸ்தாபித்து பொது மக்களின் அபிப்ராயங்களைக் கலந்தோ, ஆலோசனைகள் செய்து அவர்கள் திட்டங்கள் தீர்மானங்களை காட்பாடியையிட்டு கோயம்புத்தூர் ஜில்லா, பல்லடம் தாலுகா அருள்புரம என்னும் சேவாஸ்தல ஸ்தாபனத்தில வசிக் கும் இதனடியில் கையொப்பமிட்டிருப்பவர் மூலமாய் தயவாய் அனுப்ப வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். இது சம்பந்தமாய் எழுதவேண்டிய விஷயங்கள் யாவற்றையும் சுருக்கமாய் எழுதிப் பதிப்பிக்கக்கூடிய தமிழ் மாதப் பிரதிகளில் போதிய இடம் கிடைக்காதாகையால் இப்பணியின் பொருட்டு முன்னிலையில் வேலை செய்ய விரும்பும் ஸ்தாபனங்களும் தலை வர்களும் தாங்கள் அறியவேண்டுவனவற்றை எழுதி தெரிந்துகொள்ளலாம்.

கமிட்டியாக திருச்சபைக்கு தியாக புத்தியுடன் உழைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம். எங்கள் குறைவுகளைப் பொறுத்து சமயோசித ஆலோசனைகளைக்கொடுத்துதவி இவ்வரும் பெரும் தொண்டில் ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

'அருள்புரம்'
காரைப்புதூர் போஸ்டு,
திருப்பூர் மார்க்கம்,
கோயம்புத்தூர் ஜில்லா.
9—4—1955.

தமிழ்நாடு கிறிஸ்தவ கௌன்ஸில்
பொருளாதாரக் கமிட்டியின்பேரால்,
பவுல் மு. கோபால கிருஷ்ணன்
செயலாளன்.

5 அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியத்தின் மார்ச் மாதத்திய அறிக்கை.

கர்த்தருடைய பெரிதான இரக்கத்தால் இந்த ஊழியம் பின்வருமாறு நடைபெற்றது.

மார்ச் 4, 5, 6 தேதிகளில் மண்டபசாலை சேகரத்தில், தெற்குலோகக்கல் கவுன்ஸிலைச் சேர்ந்த, கி. மு. சங்க, ஓய்வுநாட் பாடசாலை, வாலிப சங்க தலைவர்களுக்கென்று, ஓர் பயிற்சி, மகாநாடு நடைபெற்றது.

அவ்வமயம் மேற்படி கவுன்ஸிலின் பற்பல பாகங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்தனர். பலதரப்பட்ட இளைஞர் ஊழியம்பற்றிய, சொற்பொழிவுகளும் வேத ஆராய்ச்சி கூட்டங்களும நடத்தப்பட்டன.

தெற்குலோக்கல் கவுன்ஸிலைச் சேர்ந்த குருமாரும் இதர பிரமுகர்களும் மேற்படி மகாநாட்டில் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

மண்டபசாலை சேகர குரு கனம் துரைராஜ் ஐயரவர்கள், விசேஷித்த வகையில், மகாநாட்டிற்கான சகல ஏற்பாடுகளையும், அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழிய கமிட்டியின் ஒத்துழைப்புடன் செய்திருந்தனர். மகாநாட்டில் கலந்துகொண்ட யாவரையும், கடவுள் தமது ஊழியத்திற்கென்று ஆசீர்வதித்து, உபயோகிப்பாராக.

மார்ச் மாதம் 20ᵗ தேதியன்று, பரமக்குடி உயர்நிலைப்பள்ளி கிறிஸ்தவ மாணவருக்கென்று, விசேஷித்த ஒடுக்கக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. சுமார் 30 மாணவ மாணவியர், இந்த ஒடுக்கக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்கள் எல்லோரும் அத்தியக்ஷாதீன ஆளுகைக்குட்படாத உயர்நிலைப்பள்ளிகளில் பயிலுவோர் இப்பேர்ப்பட்ட மாணவ மாணவியருக்கென்று, விசேஷித்த சிரத்தை எடுத்துகொள்ளவேண்டும் என்று, அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழிய கமிட்டி தீர்மானித்ததால், மேற்படி ஒடுக்கக்கூட்டம் நடைபெற ஏற்பாடாயிற்று.

காலையாராதனை, சிறுவர்க்கென்று சிறுவர்களால் நடைபெற்றது. இரண்டு விசேஷித்த வேத ஆராய்ச்சிக் கூட்டங்கள் ஸ்தல குரு கனம் பரஞ்சோதி ஐயரவர்களால் நடத்தப்பட்டன. "பள்ளியில் இளைஞன்" "திருச்சபையில் இளைஞன் பங்கு" என்ற பொருள்களில் சொற்பொழிவுகள் நடந்தன. அநேக சிறு சிறு பாடல்களும் கற்றுக்கொடுக்கப்பட்டன.

இரவில் வளர்க்கப்பட்ட நெருப்புக்கு முன்பாக, மாணவர்கள் தாங்கள் இனி கிறிஸ்துவின் தலைசிறந்த போர்வீரராக திகழ்வோம் என்று பிரதிக்கினை எடுத்துக்கொண்டது பரவசம் ஊட்டும் காட்சியாக அமைந்தது.

இத்தகைய ஒருக்கக்கூட்டங்கள், நம் அத்தியக்ஷாதீனத்தைச் சேர்ந்த பற்பல நகரங்களிலும் நடைபெறக்கூடுமாயின் அது எத்தனை பெரிய சிலாக்கியம் !

மார்ச் மாதம் 27ம் தேதியன்று ராமநாதபுரம், சுவார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளி, பரி அந்திரேயா உயர்நிலைப்பள்ளி, ஆகியவற்றை சேர்ந்த ஓய்வுநாட் பாடசாலைகட்குச் சென்று, அவற்றின் ஊழியத்தில் கலந்துகொண்டேன். தேவைப்பட்ட சில ஆலோசனைகளும் தந்தேன் மாலையில் சிறுவர்களுக்கென்று, நமதாண்டவர், பாடு, மரணம், உயிர்த்தெழுதலின் பேரில் ஓர் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

28ம் தேதியன்று, அத்தியக்ஷபுரம் சென்று, ஆண்களுக்கென்று ஒன்றும், பெண்களுக்கென்று ஒன்றுமாக இரு வாலிப சங்கங்களும், ஓர் ஓய்வுநாட்பாடசாலையும் உருவாக உதவினேன். ஈண்டும், மேற்படி படக்காட்சி நடைபெற்றது.

29ம் தேதியன்று "உகமை" சிறியவர்கள் மத்தியில் ஊழியம் நடைபெற்றது.

இந்த மாதம் நடைபெற்ற ஊழியத்தை ஆண்டவர்தாமே தமது நாம மகிமைக்கென்று ஆசீர்வதித்துபயோகிப்பாராக.

எனது மே மாதத்திய சுற்றுப்பிரயாணங்கள்

1—15	விடுமுறைகால வேதாகம பள்ளிக்கூடம் மதுரை
21, 22	கோம்பை பாஸ்டரேட்டு
28, 29	கிளாஞ்சுனை பாஸ்டரேட்டு

6. ஓர் வேண்டுகோள்

நமது அத்தியக்ஷாதீன வாலிப சங்கங்கள் யாவும் (புதிதாய் உருவானவைகளும் உட்பட) தங்கள் அறிக்கைகளைக் கனம் கிரகிரி ஐயர், தல்லாகுளம் மதுரை என்ற விலாசத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

தல்லாகுளம்,
7—4—55.

சா. ஜூலியஸ்,
அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியன்

7. தென்னிந்திய சபைப் பத்திரிகை

"South India Churchman" என்ற மாதாந்திர இங்கிலீஷ் பத்திரிகையை இதுவரை நம் அத்தியக்ஷாதீனத்தில் குருக்களுக்கு மாத்திரம் பாதிக் கிரயத்திற்கு அதாவது வருஷ சந்தாவில் பாதி ரூ. 1-8-0க்கு கொடுத்து வந்தோம். தற்சமயம் C.S.I. சினட் கமிற்றி மீட்டிங்கில் ஷை சலுகையை டீக்கன் மார்களுக்கும் தாய்மார் சங்க உத்தியோகஸ்தர்

களுக்கும் தேவபணிவிடை ஊழியர்களுக்கும் ஷை பத்திரிகையை பாதி சந்தா தொகைக்கே அதாவது ரூ 1-8-0க்கு கொடுக்கலாமென்று கருணையுடன் ஷை கமிற்றிமார் தீர்மானித்திருக்கிறார்கள் இந்த தீர்மானம் 1—4—55 முதல் அமுலுக்கு வருகிறது சலுகை காண்பிக்கப்பட்ட மூன்றுதர உத்தியோகஸ்தர்களும் இந்தச சலுகையை பயன்படுத்திக்கொள்வார்கள் எனக் கருதப்படுகிறது என டயோசிசன் டிப்போ மானேஜர் ஸ்ரீ அப்பா ஸ்ரீநிவாஸன் எழுதுகிறார்கள்.

சிறுவர் பாகம்

(எல். சாமுவேல் ஆசிரியர், பசுமலை)

"விதவையும் மகன் பதவியும்"

சென்னையிலுள்ள சினை பஜார் என்னும் வீதி செயற்கையழகிற் சிறந்தது. இருபுறமும் உயர்ந்த மாடமாளிகைகள் உண்டு பகல் முழுவதும் எண்ணிறந்த வாகனங்கள் அங்கே தொடர்ந்து வேகமாய்ச சென்று கொண்டிருக்கும். மத்தியான வெயில் அதிகம் மாலை ஐந்து மணிக்கெல்லாம் சூரிய உஷ்ணம சற்று தணிய மாலைப்பொழுதை மகிழ்வுடன் கழிகக, மககள் கரும்பை நாடும். எறும்பினம் போல் சாலையின இருமருஙகிலும் நெருங்கிச செல்வார்கள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் ஐந்து மணிக்குக் கண்ணைக்கவரும் வர்ணமும் புத்தப்புதிய மாதிரியமைப்பும உள்ள மோட்டார் ஒன்று வாகனங்களுக்கிடையே ஓடிசசென்றது. கடற்கரையோரம் அது திரும்பும சமயம் திடீரென்று நிறுத்தப்பட்டது மக்கள் ஏராளமாக வண்டியையச் சூழ்ந்து விட்டனர். சுமார் நாற்பத்தைந்து வயதான ஒரு பெண் அந்த மோட்டார் சக்கரத்தால் நெஞ்சில் நசுக்கப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தாள். அவளுடைய சரீரவேதனையை அவள் முகத்தோற்றத்தால் கணிக்க முடியாது, கண்கள் இமை வெட்டாது சாந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தன. புன்னகை பரிதல் போல கன்னங்களும் உதடுகளும் தோன்றின. மோட்டார்ல் சென்றவர் பெரிய அதிகாரி, அவரும் அவர் மனைவியும் அடிப்பட்ட அப்பெண்ணை வண்டியில் ஏற்றி மத்திய ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்கள் சேர்த்த பதினைந்து நிமிஷங்களுக்குப்பின் அப் பெண் மரித்து விட்டாள் அங்கேயே அநாதைப்பிணமாக அடக்கம் பண்ணப் பட்டாள்.

மரித்த மரகதம் என்னும் அம்மாது தர்மபுரி யென்னும் கிராமத்தைச் சோந்தவள். அவளுக்குத் திருமணமாகி நான்கு வருஷங்களாக யாதொரு கவலையும் குறையுமின்றித்தான வாழ்ந்து வந்தாள் யாரை மரகதம் அதிகமாக நேசித்தாள்? கணவனையா அல்லது தன்னுடைய இரண்டு வயதான அழகிய ஆண்குழந்தை ராஜனையா? அடுத்த வருஷம் மரகதம் விதவையானாள். அப்போது விடை பகர்தல் சுலபம். அன்பும் ஆறுதலும், துன்பக்கடலில் தோணியும் வாழ்க்கையின் முழு நம்பிக்கையும் மகன் ராஜன் தான். மாதாவின் தினசரி விருந்து மைந்தனுடைய மழலைச்சொற்கள். பள்ளியில் பயின்ற பாடல்கள் பரவசந்தரும் தினசரி வானொலி யின்னிசை கண்ணீரை யுலர்த்தும் கைகண்ட மருந்து.

நன்றாய் விளையும் ஒரு தோட்டமும் நான்கு ஏக்கர் புன்செய் நிலமும் அவளுடைய ஆஸ்தி. அவற்றின் வருமானம் அவள் குடும்பத்துக்கு ஏராளம். ஆகவே பிழைப்புக்குக் கஷ்டமில்லை மகன் ராஜனும் மாரிகாலத்து வாழைக குருத்தென வளர்ச்சியடைந்து வந்தான் பள்ளி நேரம் போகப் பாக்கி நேரமெல்லாம் அம்மாள் கூடவே ஆட்டுக்குட்டி போல் அலைவான். அம்மாள் கிட்ட இருந்தால கட்டை போல் தூங்குவான். அவள் அருகில் இல்லாவிட்டால் அயர்ந்த நித்திரையும் பறந்து விடும் அயலகச்சிறுவர் அவனோடு சண்டைக்கு வந்தால் அம்மாள் அவன் அடைக்கலம், நீதிபதி, சர்வாதிகாரி

பக்கத்தூரிலுள்ள உயர்தரப் பாடசாலையில் பயின்று ராஜன் பத்தாம் வகுப்புத் தேறிவிட்டான். இனிக்கல்லூரிப்படிப்புக்குச் சென்னைக்குச் செல்ல வேண்டும் பணச்செலவு அதிகமாகும் ஆனால் வருமானமோ குறைந்து விட்டது மூன்று வருஷங்களாகப் பருவ மழை தவறிவிட்ட படியால் நிலங்கள் சரியாய் விளையவில்லை குடும்பச் செலவுக்கே தானியம் போதியும் போதாமலுமிருந்தது தோட்டம் காடு முதலிய இந்த ஆஸ்திகள் இருந்தென்ன போயென்ன? மகனுடைய முன்னேற்றமல்லவா முக்கியம் என் மகனே என் செல்வம் என மரகதம் எண்ணினாள் பிழைப்புக்கு ஆதாரமாயிருந்த தோட்டத்தை விற்றுவிட்டாள். விற்ற தொகையைக் கொண்டு கஷ்டமின்றிக் கல்லூரியில் ராஜன் கற்று நான்கு வருஷங்களில் பீ.ஏ. பட்டமும் பெற்றுவிட்டார். ராஜன் பட்டம் பெற்றவுடனே அதிர்ஷ்ட வசமாகத் திடீரென்று நேரடியாக டிப்டிக் கலெக்டர் வேலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார் சென்னையிலேயே வேலை. மற்றொரு நற்செய்தி. சென்னையிலே படித்து பீ ஏ. பட்டம் வாங்கின பம்பாய்ப் பட்டணத்துப் பணக்காரப் பெண் சுசீலாவை ராஜன் ரிஜிஸ்தர் மணம் செய்து கொண்டார். ராஜன் இப்போது அதிகாரம், ஆஸ்தி, அழகிய மனைவி, வேறு விதமாய்ச் சொன்னால் உலக இன்பங்கள் செல்வங்கள் அனைத்தும் உள்ளவர்.

தாய் மரகதமோ மகன் படிப்புக்காகத் தோட்டத்தை விற்றதிலிருந்து அதிகக் கஷ்டப்பட்டாள். பருவமழை தவறிவிட்டது. நிலத்திலிருந்து வருமானம் மிகக்குறைவு தன் புன்செய்க் காடுகளில் வேலைசெய்தது மாத்திரமல்ல. உணவுக்காக அவள் கூலி வேலையும் செய்ய நேர்ந்தது. பனியாலும் மழையாலும் நனைந்து வெயிலாலுலர்ந்து சரியான உடையும் இளைப்பாறுதலுமின்றிச் சுகத்தையும் அழகையும் இழந்தாள். பரவாயில்லை. அதெல்லாம் பெற்ற பிள்ளைக்காகத்தானே? மகன் இப்போது பெரிய பதவிக்கு வந்து விட்டார். கவலையில்லாமல் அவரிடம் சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டியது தானே? அல்ல. அது சாத்தியமில்லை. மரகதம் அவலட்சணமான நாட்டுப்புறக் கூலிப் பெண். ராஜன் அவளை எப்படித் தன் மனைவி சுசீலாவிடம் காட்டுவார்? அது அவருடைய கௌரவத்துக்கே பங்கமுண்டாக்கும். தாய் தர்மபுரியிலே தான் தங்கியிருந்தாள். ராஜன் பெரிய அதிகாரி. அவருக்குச் செலவுகள் ஏராளம். ஆகையால் மரகதத்துக்கு ஏதாவதொருசமயம் தான் கொஞ்சம் பணம் அனுப்ப முடியும். ஆகவே இன்னும் தாயின் அல்லல் தீர்ந்தபாடில்லை.

ஒரு வருஷத்துக்குப் பின் ஏதோ நல்ல குணம் வந்து ராஜன் சென்னைக்கு வரும்படியழைத்துத் தாய்க்கு ஒரு கடிதம் அனுப்பினார். மரகதம்

சென்னைக்கு வந்து மகன் வீட்டில் ஒரு மாதம் தங்கினாள். மாமியைப் பார்த்தவுடனே சுசீலாவுக்கு அவள் மேல் அன்பல்ல, அருவருப்பேயுண்டா யிற்று. சுசீலாவின் அழகென்ன, படிப்பென்ன, பதவியென்ன? கூலிக் காரப் பெண் மரகதத்தை எவ்விதம் அவள் மாமியென்றழைப்பாள்? மாமியைக் காணும்போதெல்லாம் சுசீலாவுக்கு அலட்சியமான புன்முறு வல்தான். மேலும் சுசீலாவுக்குத் தமிழ் தெரியாது ஆகவே வா, போ, கிழவி, என்பது போன்ற சில வார்த்தைகளை உபயோகித்து மரகதத்தோடு சுசீலா பேசுவாள். பின்புறத்தில் சாமான்கள் போடும் அறையோரமுள்ள மற்றொரு சிறு அறைதான் மரகதத்தின் இருப்பிடம் பங்களாவுக்குள் வருவதற்கு அவளுக்குத் தடையுத்தரவு போட்டிருந்தாள் சுசீலா. அது நியாயந்தான். திடீரென்று விஸிட்டர்கள் யாராவது பங்களாவுக்கு வந்து விட்டால் டிப்டிக் கலெக்டரின் கௌரவத்துக்கே பங்கம் ஏற்படுமல்லவா?

பங்களாவில் அடிக்கடி விருந்துகள் நடைபெறும். மரகதம் கேள்விப் பட்டிராத பலவித பதார்த்தங்கள் பரிமாறப்படும். விருந்தில் மீந்த பண் டங்கள் சில சமயம் மரகதத்துக்குக் கிடைக்கும். தனியாகச் சுவரையும் விட்டத்தையும் பார்த்துக் கொண்டு மரகதம், அவற்றைச் சாப்பிடுவாள். ஒரு நாள் மற்றொரு டிப்டிக் கலெக்டர் ராஜன் வீட்டில் விருந்தருந்திக் கொண்டிருந்த போது அவர் ராஜனிடம் மரகதத்தைச் சுட்டிக்காட்டி அந்த அம்மாள் யார்? உங்கள் முகச்சாயல் அவர்களுக்கு இருக்கிறதே என்று சொன்னார். ராஜன் அது ஒரு ஸெர்வன்ட் என்று அவசரமாகச் சொல்லிவிட்டு வேறு விஷயம் ஒன்றை உடனே பேச ஆரம்பித்தார். ராஜன் சொன்னது ஒரு கௌரவமான வார்த்தைதான். உண்மையில் மரகதம் ஊழியக்காரருக்கு எவ்வளவோ கீழானவள் வேலைக்காரர் பங்க ளாவில் எந்த அறைக்கும் செல்லலாம் பெட்டிகளைத் திறக்கலாம் எஜமான் மோட்டாரிலும் ஏறிச் செல்லலாம் ஆனால் மரகதம் பங்களாவிலுள்ள நாய்க்கும் பூனைக்கும் கீழானவள். நாயக்குட்டிக்கும் பூனைக்குட்டிக்கும் எந்தப் படுக்கையிலும் ஆசனத்திலும் வீற்றிருக்கவும் தூங்கவும் உரிமை யுண்டு பிள்ளைக்காய்த் தன்னையும் தன் செல்வமனைத்தையும் தியாகம் பண்ணின தாய்க்கு மறைவான இருப்பிடம்.

மரகதத்துக்கு இவ்விதச் சிறை வாசம் ஒரு மாதம் தான். அதன் பின்? இருப்பிடம, உணவு, இன்பம், துன்பம் என்பதொன்றும் அவளுக் குப் பொருட்டலல. நித்திய நிலையாத நித்திரை விருந்து நடந்த அந்த இரவில் ராஜனும் சுசிலாவும் வெகுநேரம் தாழ்ந்த குரலில் ஏதேதோ ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தனர். மறு நாட்காலை சுமார் ஏழு மணிக்கு ராஜன் தாயிடம் வந்து பேசினார். ராஜன் பங்களாவில் தாயோடு பேசினது இது இரண்டாம் முறை. ஏன் நீங்கள் தர்மபுயில் தங்கியிருக்க லாமே. நீங்கள் இங்கே தங்கியிருப்பது உங்களுக்கும் எங்களுக்கும் வசதிக் குறைவுதான். நமக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து உங்களுக்கு மாத்திரம் வேண்டிய உணவை நீங்கள் சம்பாதிக்க முடியாதா? அவசிய மானபோது உங்களுக்கு பணம் அனுப்புகிறேன். இன்றைக்கு ஊருக்குப் போய்ச் சேருங்கள் என்று அதிகார தோரணையான குரலில் ராஜன் கூறினார். மரகதம் பதில் ஒன்றும் கூறவில்லை. தரையையே பார்த்த வண்ணமாயிருந்தாள்.

அன்று காலை பத்து மணிக்கு ராஜனும் சுசீலாவும் எக்மூரிலுள்ள ஒரு பெரிய பாடசாலையில் பெற்றோர் சங்க விழாவுக்குச் சென்றார்கள். ராஜன் தலைமை தாங்கினார். பெற்றோரைக் கனம் பண்ணுதல் என்பது தான் பேசுவதற்காக மாணவர் எடுத்துக்கொண்ட பொருள். தலைவர் உரையில் ராஜன் அப்பொருள் பற்றி ஆழ்ந்த கருத்துக்களோடும் ஆய்ந்தெடுத்த அழகிய சொற் சுவையோடும் அரியதோர் சொற்பொழிவாற்றினார். அப்பொருள் பற்றியே சுசீலாவும் ஆங்கிலத்தில் பேச, ராஜன் அதைத் தமிழ்ப்படுத்தினார். நன்றி நவிலும் கட்டத்தில் சங்கக் காரியதரிசி தம்பதிகளைப் பெற்றோரைப் பேணும் தர்மத்துக் குறைவிடமோ அல்லது தர்மத்தின் சொரூபங்கள் தானோவென வானுரவுயர்த்தி யுரைத்தார். ராஜன் மகிழ்ந்து அச்சங்கத்துக்கு 100ரூபாய் நன்கொடை கொடுத்தார்.

தாய் மரகதம் எங்கே? அவள் பங்களாவில் இல்லை. அவளைத் தேடுவாருமில்லை. காலை ஒன்பது மணிக்கெல்லாம் கூண்டை விட்டகன்று குலத்தால் கொத்தப்படும் குருவின் நிலைக்கு வந்து விட்டாள். அனாதையின் துயரையறிந்து ஆதரிப்போர் சென்னையில் யார்? எங்கே சென்றாள்? அவளுக்கும் தெரியாது. கால்கள் நடந்தன. கண்கள் திறந்திருந்தன. பிரக்ஞையற்ற கனவு நிலையில் அவள் மறுநாள் காலை ஐந்து மணிவரை யலைந்தாள். மேடும் பள்ளமும் வீடும் சுடுகாடும் ஓடும் வாகனங்களும் அவளுக்கு ஒன்றுதான் ஐந்து மணிவரை. ஆம் அதற்குமேல் அவளுக்கு நித்திய நிம்மதி. நன்மை தீமை இன்பம் துன்பம பசி களைப்பு ஒன்றும் இராது. எல்லாவற்றையும் ஒரு நொடியில் தகர்த்து விட்டது கண்ணைக் கவரும் வர்ணம் தீட்டப்பட்ட மோட்டாரின் சக்கரம். எந்த மோட்டாரின் சக்கரம்? செல்வக்குமாரன் ராஜன் மோட்டார் சக்கரம். மோட்டாரில் ராஜன் அருகில் அமர்ந்திருந்தது அவருடைய ஆருயிர்த்துணைவி சுசீலா.

பிரசங்கம்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்)

" தூங்குகிற நீ " எபே 5 14

" தூங்குகிற நீ " யாரைக்குறிக்கும்?

ஆவிக்குரிய ஜீவியத்தில் கவலையற்றிருப்பவனைக் குறிக்கும் கிறிஸ்தவ வாழ்க்கையில் அசதியாயிருப்பவனைக் குறிக்கும். அவ்வாழ்க்கையில் துன்பம் நேரிடுகையில் சோர்ந்து பின்வாங்கிப் போகிறவனைக் குறிக்கும். சிற்றின்பத்திலும், உலக ஆசாபாசங்களிலுமீடுபட்டு நிர்விசாரமாய் இருப்பவனைக் குரிக்கும். தன் பாவஜீவியத்தைப் பற்றி உணர்வில்லாமலிருக்கும் எந்த ஆத்துமாவையும் அது குறிக்கும்.

" தூங்குகிற நீ "............எழுந்திரு

கிறிஸ்தவ வாழ்க்கை தூங்கிற ஜீவியமல்ல. அது எப்பொழுதும் விழிப்பாயும ஜாக்கிரதையாயு மிருக்கவேண்டிய ஜீவியம் ஏனெனில் தூக்கம் மோசமுள்ளது. சில திருஷ்டாந்தங்களைக் கவனிப்போம்.

1 யோனாவின் தூக்கம் (யோனா 1 : 5) கவலையற்ற தூக்கம்.

"யோனாவோவென்றால்..............நித்திரை பண்ணினான்" தேவ சித்தத்தை அறிந்தும், அதற்குக் கீழ்ப்படியாமல் தன் சுயசித்தப்படி செய்யத் தீர்மானித்து, தர்ஷீசுக்குப் போகிற கப்பலில் ஏறி கீழ்த்தட்டில் போய் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான். தனக்கு வரப்போகிற மோசத்தை அறியாதவனாய் தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் கவலை யற்றவனாய் நித்திரை பண்ணினான் (பாவ நித்திரை)தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படியாமல் உன் இஷ்டப்படி நடக்கிறவனே! நீயும் யோனாவைப் போல் தானே தூங்குகிறாய்! "தூங்குகிற நீ"............எழுந்திரு

2. சீஷரின் தூக்கம் (லூக். 22 45-46) அஜாக்கிரதையான தூக்கம் கெத்சமெனேயில் இயேசு சுவாமி விழித்திருந்து ஜெபிக்கையில் அவரு டைய விசேஷித்த சீஷர் தூங்குகிறார்கள் விழித்திருந்து ஜெபிக்க அவா நினைப்பூட்டின பின்னும் தூங்குகிறார்கள். அவர் பலத்த சத்தத்தோடும், மிகுந்த கண்ணீரோடும், இரத்த வேர்வையோடும், வியாகுலப்பட்டு ஊக் கத்தோடு ஜெபிக்கையில் தூங்குகிறார்கள். பலன் என்ன? இயேசுவைப் பிடித்தபோது அவர்கள் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். சீமோன் பேதுரு தூக்கமயக்கத்தில் பதஷ்டமாய் பட்டயத்தை எடுத்து பிரதான ஆசாரிய னுடைய வேலைக்காரனின் காதை வெட்டினான். அதனாலுண்டான பயத் தால், தூரத்தில் பின்சென்றான், தகாத இடத்தில் உட்கார்ந்தான். மறுத லித்தான. சீமோன் பேதுரு........ மறுதலித்தான். தூக்கம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வீழ்ச்சியை உண்டுபண்ணும்.

3. எலியாவின் தூக்கம். (ராஜா 19.5) சோர்புள்ள தூக்கம் யெகோவாவுக்காக வைராக்கியம் பாராட்டி பாகால் தீர்க்கதரிசிகளைச் சங்கரித்த எலியா, யேசபேல் தன் பிராணனை வாங்கத் தேடுகிறாள் என்று கேள்விப்பட்டபோது, சோர்படைந்து தன் பிராணன் தப்பி ஓடி சூரைச செடியின் கீழ் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான். நமது வாழ்க்கை யில் துன்பம் கஷ்டம் நேரிடும்போது நமயிலனேகர் சோர்ந்து போய், போதும் கர்த்தாவே, என்னை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லி எலியா வைப்போல தூங்குகிற சமயங்கள் உண்டல்லவா? "தூங்குகிற நீ"...... எழுந்திரு நீ ஆவிக்குறிய வாழ்க்கையில் பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம். சோர்ந்து போகாதே! இதோ சுடான அப்பம்— தண்ணீர்,,

(1 ராஜா 19. 6—8)

ஓர் உன்னத வழி

இரட்சணிய யாத்திரிகம் காட்டுவது

(வித்துவான் வி. ப. கா. சுந்தரம், பசுமலை)

எல்லா மார்க்கமும் ஒன்றுதான். ஒரு பட்டணத்தையடையப் பல வழிகள் உள்ளன; எந்த வழியில் சென்றாலும் இறுதியில் பட்டணத்தை யடைந்து விடலாம்; அதுபோலவே எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் கடவுளை யடைந்துவிடலாம்—என்று இவ்வாறு கூறிவருகின்றவர் பலர்

உள்ளனர். பலவழிகள் இருக்கலாம்; அவ்வழிகள் பட்டணத்தைச் சென்றடையலாம்; ஆயினும் அவ்வழிகளில் சிறந்தது எது? ஒழுங்கானது எது? என்று தெரிந்து தெளிந்துகொள்ளல் வேண்டும் பட்டணத்தையடையாமல் பாழான இடத்திற் கழைத்துச் செல்லும் வழிகளும் உள்ளன.

'எல்லாமார்க்கமும் ஒன்றுதான்' என்போருக்கு மீட்பு நெறிக்கவிஞர், கிருஷ்ணபிள்ளை கூறுவது என்ன என்றறிவோம். உன்னத வழிப்போக்கன் ஒருவன் வஞ்சகமும், பொய்யும் சூதும் நிறைந்த உலகத்தைப் பார்க்கிறான்; விவலிய மறை யினையும் கற்றுப் பார்க்கிறான். சூது நிறைந்த உலகத்தைப் பின்பற்றுவதா? அல்லது தூய மறை காட்டும் வழியைப் பின பற்றுவதா? என்ற மயக்கம் மனத்திலே தோன்றுகிறது. இருதலைக் கொள்ளிக் கட்டையின் இடையிலே அகப்பட்ட எறும்புபோல 'எப்பக்கம் செல்வது' என்று நிச்சயங்காணுமல் வாடுகிறான்; சூறவளியில் சிக்கிய சருகைப் போல சுழல்கின்றான். ஓரிடத்திலும் தரிக்க இயலவில்லை: மேலுங் கீழும் பார்க்கிறான் உள்ளங் கசந்தழுகிறான். இதுவே ரட்சணிய யாத்திரிகத்தின் வழிப்போக்கன் அடைந்த நிலை. இதோ கவி:—

'இருதலைக் கொள்ளி யுற்ற எறும்பென எகு மார்க்கம் ஒருதலை யாணும் காணு(து) உணங்கியோன்; உலவை யுற்ற சருகெனச் சுழல்வன்: யாண்டும் தரிக்கிலன் மேலும் கீழும் கருதி நோக் கிடுவன்; உள்ளம் கசந்தழுதிடுவன் மன்னே?

(கடின சொல்லுரை—எறும்பு என—எறும்பைப்போல. ஒரு தலையானும் காணது—நிச்சயமாய்க் காணமாட்டாது. உணங்கியோன்—வாட்டங் கொண்டான். உலவை—சுழல் காற்று. மன்னே—அசை)

'இருதலைக் கொள்ளியுற்ற எறும்பெனச் செல்லும் மார்க்கம் தெரியாமல் திகைத்தல் கூடாது. நாசந்தரும பாதையை விடல் வேண்டும் நல்ல வழியைக் கடைப்பிடிக்க வேண்டும்'. என ஏங்கினன் வழிப்போக்கன். மேலும் அவன் கூறுவதாவது.—ரட்சிப்பின் வழி இதுதான்' இதுதான் என்று உலகினர் உளறுகின்றனர்; ஆனல் பல வழிகள் பொய் வழிகள். ஆதலால் அவ்வழிகளிலே நான் செல்லுபவன் அல்லன் தெய்வ நாயகன் திரு நகர்க்குச் செல்லுகின்ற வழி எந்த வழி என்று நன்றாக விசாரித்து அறிந்து கொளவேன். பேரறிஞரையும் பக்திமான்களையும கேட்டுத் தெளிந்து கொள்வேன். இன்னும் நான் அந்த வழியை அறிந்துகொள்ளவில்லை என்கின்றான். இதோ செய்யுள்:—

உய்வழி இது இது என் றுளறும் பல்வழி
பொய்வழி அவ்வழி போகுவேன் அலன்
தெய்வநா யகன்திரு நகர்க்குச் செல்வழி
எவ்வழி யவ்வழி இன்னுந் தேர்கிலேன்.

(சொல் உரை:— உய்வழி—இரட்சிப்பின் வழி. பல் வழி=பல வழி. செல்வழி=செல்லுகின்ற வழி. தேர்கிலேன்=அறியேன்

குருமாரையும் அடியாரையும் கேட்கின்றான் வழிப் போக்கன்; வழியின் தன்மையை அறிந்து கொள்ளுகிறான். வழி எத்தன்மையது? இன்பமானதா? மிக்க விசாலமானதா? செல்லச் செல்ல விரிவடைந்து செல்

லுமா? வளைந்து வளைந்து செல்லுமா? — அன்று! அன்று!! நித்திய நகர்க்குச் செல்லும் வழியானது மிக்க நேரானது. கோணல், திருகல் வளைவு அற்றது (என்ன பொருள்? நம் வாழ்க்கையிலே திருகல், பொய், சூது முதலியவை யற்று நடக்க வேண்டும்: - என்பது பொருள்) வழி நெருக்கமானது; அதாவது நீதியின் பொருட்டும் பிறர் நன்மையின் பொருட்டும் பலவிதத் துன்பங்களை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். திகைப்பு இல்லாத வழி— அதாவது சந்தேகம், அவநம்பிக்கை முதலியவை கொள்ளாது நடக்கவேண்டும். ஜீவ வழி—அதாவது உயிரை உய்விக்கும் வழி ஓர் வழி— அதாவது ஒப்பற்ற உன்னத வழி கிருஸ்து காட்டும் வழி. இஃதன்றி உண்மை வழி ஒன்றில்லை. நரக வழியைப் பின்பற்றி அநேகர் அலைவர். இதோ செய்யுள்:—

நேர் வழி நெருக்கவழி நின்மலந கர்க்குச்
சேர்வழிதி கைப்பில்வழி ஜீவ வழி சீர்சால்
ஓர்வழியி தன்றியிலை உண்மைவழி கும்பிப்
பேர்வழிய துற்றலைபி ராந்தரும் அநேகர்.

சொல்லுரை:—நின்மல— குற்ற மற்ற. சீர்சால்—சிறப்பு நிறைந்த. கும்பிப் பேர்வழியது—நரக வழியது. பிராந்தரும்—மயக்க முறுவர்.

எல்லா மார்க்கமும் ஒன்று என்பார்க்கு மேலும் ஓர் உவமை மூலமாக மறுப்புக் கூறுகின்றார். இந்தியாவில் சில ஆறுகள் கிழக்கே நோக்கி ஓடுகின்றன; சில மேற்கே நோக்கி ஓடுகின்றன. கிழக்கே ஓடுபவற்றை 'நதி' என்றும் மேற்கே ஓடுபவற்றை 'நதம்' என்றும் சொல்வார்கள். ஆகவே நதிக்கும் நதத்திற்கும் வேறுபாடுண்டு அவை ஒன்றாகக் கூடமாட்டா. கூடினாலும் பெயரிலும் வேகத்திலும் பயன் படும் தன்மையிலும் வேறுபாடுக. அதுபோல நற்கதி கூட்டுகின்ற மார்க்கத்தோடே, எரிநரகம் கூட்டுவிக்கும் மார்க்கத்தை இணைப்பது பொருந்தாது. அவை எதிர் எதிராகச் சென்று பொருந்து மென்றல் மிக்க ஏழைமைப் புத்தியை காட்டி விடுவதாகும். இதோ செய்யுள்:—

எதிர் எதிராகச் செல்லும் இடை நெடுந் தூரமுள்ள
நதி நதம் ஒருங்கு கூடா; கூடினும் நாமம் வேறாம்;
கதி யுறும் மார்க்கத் தோடு கதழ்எரிக் கவிழ்த்து மார்க்கம்
எதிர் உறீஇப் பொருந்து மென்றல் ஏழைமைப் பால தேயாம்.

ஆகவே கிருஸ்து ஒருவரே ரட்சணிய மூர்த்தி; அவர் காட்டும் வழியே உன்னத மெய் வழி. ஒருவனே தேவன். கிருஸ்து கூறும் வழியினையே பிறர் எவர் கூறினும் சமநோக்குள்ள உள்ளம் ஏற்றுக்கொள்ளும்.

வேதவினுக்களுக்குரிய விடைகள்

1. பத்மு தீவில் கைதியாய் இருந்தார்.
2 வெளி 1 : 16
3. லேவி 8 : 8
4. I நாளா 11 : 15—19
5. எலியா II ராஜ 2 : 12
6 ஆதி 8 : 6-7 1 ராஜா 17 : 2—7
7. யோசு 2 · 18
8. யாத் 2 : 21
9. யோசு 5 : 12
10. தானி 2 : 26
11. யாத் 18 : 3—4
12. லூக் 2 : 1

இயேசுவின் ஜெபப்பள்ளி

பத்தோன்பதாம் பாடம்

' நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன் '

அல்லது

ஜெபிக்கவும் செயலாற்றவும் வல்லமை.

'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் **பெரிய கிரியைகளையும்** செய்வான். **நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ,** குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்' (யோவான் 14 : 12, 13).

நமது இரட்சகர் தமது சீடருடன் தமது திருப்பணியை மலைப்பிரசங்கத்தோடு ஆரம்பித்ததுபோலவே, யோவானால் எழுதிவைக்கப்பட்டுள்ள பிரிவுபசாரச் சொற்பொழிவால் தமது திருப்பணியை முடிக்கிறார். இவ்விருசொற்பொழிவுகளிலும் ஜெபத்தைப்பற்றியே பலமுறை பேசுகிறார். ஆனால் இரண்டிற்கும் சிறிது வேறுபாடுண்டு. மலைப்பிரசங்கத்தில், தமது ஜெபப்பள்ளியில் புதிதாயிடம் பெற்ற சீடருக்காக, கடவுளைத் தமது பிதாவென, ஓரளவேயறிந்த அடியாருக்காக, அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக ஜெபத்தைப்பற்றி போதிக்கிறார். ஆனால் அவரது ஜெபப்பள்ளி முடிவாகுங்காலத்தில், அதில் பயிற்சி பெற்ற அடியார், அவரது சேவையைத் தொடர்ந்து செய்யும் ஆதாரகும்படி ஜெபத்தைப்பற்றிப் போதிக்கிறார். முன்னையதின் முக்கியமான பாடம், 'சிறு பிள்ளையைப்போலிரு. நம்பிக்கையுடன் ஜெபி. எல்லா நல்ல ஈவுகளையும் பரமபிதா அருள்வாரென பிதாவை நம்பு' என்பதே. பின்னையதில் இன்னும் பெரிய பாடத்தைப் போதிக்கிறார். பிதாவிடத்திலிருந்து அவர் அறிந்ததனைத்தையும் அவ்வடியார்களுக்கு அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவர்கள் இப்பொழுது

அவருக்குச் சிநேகிதர் அவரது வேலைத் திட்டத்தைத் தெரிந்துகொண்ட தூதுவர்கள் அவர்கள். அவரது திருப்பணியும் பரம இராஜ்யப்பணியும் அவர்கள் கைகளில் ஒப்படைக்க வேண்டிய வேளை வந்திருக்கிறது. இப்பொழுது அவர்கள் 'பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும்' அவருக்குச் சாட்சிகளாயிருக்கும்படி அவர்கள் வெளியே போகவேண்டியிருக்கிறது. இப்பெரும்பணி அன்னவர் செய்வதற்கு வேண்டிய வல்லமையைப் பெறுவதற்கு ஜெபம் அவசியமாயிருக்கிறது கிறிஸ்து பரமேறினவுடனே, அவர்கள் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தமாகிய ஜெபமும் சேவையும் ஆரம்பமாகிறது.

உலகில் அவரது தேகமாகவும், பரத்தில் அவரோடு ஒன்றுபட்டவர்களாகவும், அவரிலும் பெரிய கிரியைகளை அவ்வடியார்கள் செய்யக் கடமைப்பட்டுளர். அவரது வெற்றியிலும் அவர்களது வெற்றியும் சித்தியும் பெரிதாயிருக்க வேண்டியிருக்கிறது இதற்கு இரு காரணங்கள் கூறுகிறார். (1) எல்லா வல்லமைகளையும் பெறுவதற்காக அவர் பிதாவிடம் போக வேண்டியிருக்கிறது. (2) அவரது திருநாமத்தினாலே அவர்கள் ஜெபிக்க வேண்டியிருக்கிறது. 'நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால்' என்பதையும், 'நீங்கள் எதைக் கேட்பீர்களோ, அதைச் செய்வேன்' என்பதையும் சற்று கவனிக்கவும் அவர் பிதாவினிடம் போவது இவ்விதமாயிரு ஆசிகளை அளிக்கும். அவரது நாமத்தினாலே எல்லாவற்றையும் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள். அதன் விளைவாக அவரிலும் பலத்த கிரியைகளைச் செய்வார்கள். எனவே இப்பிரிவுபசார மொழிகளில் நமக்கு இரண்டு போதனைகள் உள (1) இயேசுவின் ஊழியத்தை செய்கிற எவரும், அவரது நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும். (2) அவரது நாமத்தினாலே ஜெபிக்கிற எவரும், அவரது நாமத்தினாலே சேவை செய்யவேண்டும்

சேவை செய்பவன் ஜெபிக்கவேண்டும். ஜெபத்தின் மூலமே சேவை செய்ய வல்லமை பெறப்படுகிறது. இயேசு செய்த திருப்பணியை விசுவாசத்தோடு செய்கிறவன் அவரது நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும். அவரது மாம்ச நாட்களில் அவரே மகத்துவமான பலத்த கிரியைகளைச் செய்தார். சீடரால் துரத்த முடியாத பேய்களும் அவரது ஒரு சொல்லால் ஓடின. பிதாவினிடத்திற்கு அவர் போனபிறகு, நேர் முகமாகத் தொண்டாற்ற அவர் தேகம் இங்கில்லை. எனவே அவரது திருத்தேகம் அவரது சீடரே. ஆகையால் பரத்திலிருக்கும் அவரது சேவை அவரது அடியாரால்தான் செய்யப்படக்கூடும். உலகப்பிரகாரமாகச் சொன்னால், 'தான் போகாத காரியத்துக்குத் தம்பி போனால் பாழ்' என்னும் பழமொழிக்கிசைய அவரது திருப்பணி க்ஷீணதிசையடையும் என எவரும் எண்ணக்கூடியது. இவ்வெண்ணத்தை உலக வரலாறும் உறுதிப்படுத்துவதாயிருக்கிறது. ஆனால் இயேசுவோ அதற்கு மறுதலையாக உறுதி கூறுகிறார்! என்ன ஆச்சரியம்!!

'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைச் செய்கிறதோடு இவற்றிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்' அவருக்கு வரவிருக்கும்

மரணம் பாவத்தின் வல்லமையை நிக்ரகம் செய்து அதற்கொரு முடிவு கட்டுவதாயிருந்தது. அவரது உயிர்த்தெழுதலோடு நித்திய ஜீவனின் வல்லமைகள் மனித உடலைச் சொந்தமாக்கி, மனித வாழ்க்கையின்மேல் ஆதிக்கம் செலுத்துவதாயிருந்தது. அவரது பரமேறுதலினால் தமக்குச் சொந்தமானவருக்குப் பரிசுத்தாவியை நிறைவாய் அனுப்பும் வல்லமையை அவர் பெறவேண்டியிருந்தது சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அவருக்கும் உலகில் அவரது அடியாருக்கும் உள்ள ஐக்கியம் முற்றுப்பெற வேண்டியிருந்தது. அத்தருணத்திலதான் ' நான் பிதாவினிடத்திற்கு போகிறபடியால் என்னை விசுவாசிக்கிறவன் இவற்றிலும் வல்ல செயல்களைச் செய்வான் ' என்று உறுதி கூறினார். இவ்வாக்குறுதி அவருக்குப்பின் நிரூபிக்கப்பட்டது ஆண்டவர் தமது மூன்றாண்டுத் திருத்தொண்டில் சுமார் ஐந்நூறு அடியாரை உண்டாக்கினார். அன்னவருள் பலர் பலவீனர். அவரிலும் வல்ல செயல்களைச் செய்யும் பாக்கியம் பேதுரு, பவுல் போன்றவர்க்கே கிடைத்தது. பேதுருவின் ஒரே பிரசங்கத்தால் ஒரே நாளில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றனரன்றோ?

அவர் பிதாவினிடத்திற்குப் போவதால் ஜெபத்திற்குச் செவிகொடுப்பதற்கு அவருக்கு புதிய வல்லமை கிடைக்கும். பலத்த கிரியைகளைச் செய்வதற்கு இரண்டு காரியங்கள் தேவை. எல்லா வல்லமைகளையும் பெற அவர் பிதாவிடம் போகவேண்டும். அவரிடமிருந்து எல்லா வல்லமைகளையும் நாம் பெற அவருடைய நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும். அவர் பிதாவிடம் கேட்டதைப் பெற்று பலத்த கிரியைகளை நாம் செய்யுமாறு நமக்குப் புதிய வல்லமை அருளுகிறார். நாம் அவருடைய நாமத்தினாலே விசுவாசமுடன் கேட்பதால் நாம் பலத்த கிரியைகள் செய்யத்தக்க வல்லமை கிடைகிறது.

அந்தோ! கிறிஸ்து செய்ததிலும் பெரிதான காரியங்களை நாம் செய்யாவிட்டாலும், கிறிஸ்து செய்த செயல்களையே செய்யும் வல்லமையை இன்று நாம் பெறாதது எத்தனை பரிதாபம்? இதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு அவரை விசுவாசிப்பதும், அவர் நாமத்தினாலே விசுவாசத்தோடே ஜெபிப்பதும் நமக்குள் குறைந்துபோனதே. அதற்குக் காரணம் கிறிஸ்துவின் தாசரே, திருச்சபைத தலைவர்களே, சுவிசேஷகர்களே, குருக்களே, மிஷனரிகளே, ஆசிரியர்களே. மூப்பர்களே வேதாகமமகளிரே, கிறிஸ்துவை விசுவாசிப்போம்; கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிப்போம். பிதாவிடமிருந்து ஆண்டவர் நமக்காகப் பெற்ற வல்லமையில் பங்குபெறுவோம் இந்த வல்லமையைக்கொண்டுதான் விசுவாசி எவனும் பலத்த செயல்களைச் செய்ய முடியும். எல்லாப் பலவீனத்திற்கும், முறையீட்டுக்கும், தகுதியின்மைக்கும்; கஷ்டங்களுக்கும், தோல்விக்கும் காரணம் யாது என்ற வினாவிற்கு இயேசு தருகிற ஒரே விடை, நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால், என்னை விசுவாசிக்கிறவன் என்னைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளைச் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ அதைச் செய்வேன் " என்பதேயாம். எனவே இயேசுவின் சேவையைச் செய்கிற விசுவாசி முதலாவது விசுவாசிக்கவேண்டும். பிறகு எல்லாம் வல்ல அவரோடு இணைக்கப்படவேண்டும் பிறகு அவரது நாமத்தினாலே விசுவாசத்தோடு ஜெபிக்கவேண்டும். இஃதில்லாது நமது

தொண்டு வெற்றூரவாரமுடைவது. ஒரு வேலை அது பாவத்தைக் குறைக்கவோ ஆசீர்வாதத்திற்காயத்தப்படுத்தவோ உதவலாமேயொழிய, வல்லமை விளங்க உதவாது. சக்தியுள்ள ஊழியத்திற்குச் சக்தியுள்ள ஜெபம் தேவை.

இதிலுள்ள இரண்டாம் பாடம் யாதெனில், ஜெபிக்கிற எவனும் **திருத்தொண்டாற்ற வேண்டும்** என்பதேயாம். சேவை செய்யும் வல்லமைக்காகவே ஜெபத்திற்கு அத்தகைய பெரும் வாக்குத்தத்தங்கள் அருளப்பட்டுள. சேவை செய்வதிலேயே வல்லமையுள்ள ஜெபம் பெறப்படும். இப் பிரியா விடைச் சொற்பொழிவில் ஆண்டவர் அந்த எல்லையற்ற ஜெப வாக்குத்தத்தங்களை அறுமுறை கூறுகிறார். யோவான் 14 . 13, 14 ; 15 : 7, 16 ; 16 : 23, 24 முதலிய வேத வசனங்களைக் காண்க.) 'எதைக் கேட்பீர்களோ' 'எதைக் கேட்டாலும்' 'நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ' 'கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்' என்ற இவற்றின் கருத்தென்ன? அர்த்தமென்ன? இவற்றை எத்தனையோ விசுவாசிகள் மகிழ்ச்சியோடு வாசித்து, தங்கள் தேவைகளுக்காக அவற்றைக் கேட்டும் ஏமாந்து போயிருக்கின்றனர். இவ்வாக்குத் தத்தங்களை அவற்றின் சுற்றுச் சார்புகளிலிருந்தும் தனியாய்ப் பிரித்ததே இததோல்விக்கு, இவவேமாற்றத்திற்குக காரணம். **அவரது திருப்பணியைச் செய்வதன் சமபந்தமாகவே** பிதாவோடு தமது நாமத்தைத் தாராளமாகப் பயன்படுத்தும் வாக்குத்தத்தத்தை அருளினார். இயேசுவின் திருப்பணிக்காக, அவரது இராஜ்யத்திற்காக், அவரது திருச் சித்தத்திற்காக, அவரது மகிமைக்காக, எந்த விசுவாசி தன்னை முற்றும் ஒப்புகொடுக்கிறானே, அந்த விசுவாசிக்கே அவ்வாக்குத் தத்தங்களின் வல்லமை கிடைக்கும் தன் சுயநலத்திற்காக மட்டும் அவ்வாகுத்தத்ததைப் பயன்படுத்த விரும்புகிற எவனும அதன் பலனையடைவான். ஏனெனில், அவன தனது சுயநலத்திற்காக இயேசுவைத் தனக்கு அடிமையாக்கத் துணிகிறான் ஆனால் ஆண்டவரின் திருப்பணிக்காக அதனைப் பயனபடுத்துகிறவனே நிச்சயமாக அதன் பலனை அடைந்தே தீருவான். ஏனெனில் ஆண்டவரின் காரியமாக, அவருக்குத் தன்னை அடிமையாக்குகிறான். ஜெபம் சேவை செய்யும் வழி வகைகளைக் கற்பிப்பதோடு அதறகுரிய பலத்தையும் தருகிறது. அம்படியே திருத்தொண்டும் ஜெபிக்கும் வழிவகைகளைப் போதிப்பதோடு, ஜெபம் செய்யும் வல்லமையையும் தருகிறது.

இயற்கை உலகிலும், ஆத்மீக உலகிலும் இது மெய் உள்ளவனெவனே அவனுக்குக் கொடுக்கப்படும். சிறியதில் விசுவாசமாயிருப்பவன் பெரியதிலும் விசுவாசமாயிருப்பான். நாம் ஏற்கனவே பெற்றுள்ள சிறிய அளவான கிருபையுடனே ஆண்டவர் சேவைக்காக நம்மை ஒப்புக்கொடுப்போமாக. அவரது திருப்பணியே நமது ஒரு மெய்யான ஜெபப்பள்ளியாகும். முரட்டாட்டமும் புரட்சியுமிகுந்த ஜனங்களை நடத்தும் பொறுப்பை மோசே மேற்கொண்டபோதுதான், கடவுளிடம் தைரியமாய்ப் பேசி அவருக்காகப் பெருங்காரியங்களைக் கேட்டான் யாத். 33 : 12, 15, 18 . கடவுளுக்கும் அவரது சேவைக்கும் உன்னை முற்றும் ஒப்புக்கொடுக்கும்போதே, இவவாக்குத்தத்தங்கள் உனக்கு எவ்வளவு தேவை என்பதையும், அவ்வாக்குகள் நிறைவேற்றப்பட எவ்வளவாயெதிர்பார்ப்பாயென்பதையும் நீ உணரக்கூடும்.

விசுவாசியே! இயேசு விட்டுப்போன திருப்பணியைத் தொடர்ந்து செய்யும்படிக்கே நீ அழைக்கப்பட்டிருக்கின்றாய். நீ நியமிக்கப்பட்டிருக்கின்றாய். உன்னிலும், உன்மூலமும் அவர் செய்த பணியிலும் பெரிய பணிகளை நீ செய்யத்தக்க வல்லமையைப் பிதாவிடம் பெற்று உனக்கருளவே இயேசு பிதாவிடம் போயிருக்கின்றார்.

'என் நாமத்தினாலே நீங்கள் கேட்பது எதுவோ அதனைச் செய்வேன்' என்றார். கிறிஸ்துவின் திருத்தொண்டை நிறைவேற்ற உன்னை ஒப்புக்கொடுத்து அதற்காகவே வாழ் அப்பொழுது அதிசயமான பதில்களை உன் ஜெபதபங்களுக்குப் பெறும் வழிவகைகளை அறிந்து நீ ஜெபிக்கக் கற்றுக்கொள்வாய். இப்படி நீ உன்னையே அவருக்கு ஒப்புக்கொடுக்கும் போது அவரிலும் வல்ல காரியங்களை நீ செய்யும் வல்லமை பெறுவாய். கிறிஸ்துவில் முழு விசுவாசம் வைத்து, தைரியமாய் ஜெபிக்கும் விசுவாசிகள் கூட்டுழைப்பால் கிறிஸ்து முழு உலகையுமே வெல்லுவார்.

கி.மு. சங்கப் பொருட்கள்—மே, 1955

(அத்தியட்சாதீன இளைஞர் ஊழியன்)

ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம்

(4) தேவனுடைய வழிகளில்

தேவனுடைய நாள்

மே. 1. ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம் (4) தேவனுடைய நாள் யாத 20:8—11 லூக் 13:10—17.

தற்பிரதிஷ்டை என் ஜீவன் (4) என் வாய்

மே. 2. தேவ சப்தம் ஆதி 3:8—14.

3. தேவ சப்தம் உபா 28:1—14.

4. தேவ சப்தம் சங் 19:1—14.

5. உன்னதத்திலிருந்து சப்தம் அப் 9:1—9.

6. உன்னதத்திலிருந்து சப்தம் வெளி 1:4—12.

7. உன்னதத்திலிருந்து சப்தம் வெளி 19:1—6.

8. தற்பிரதிஷ்டை "எந்தன் ஜீவனை, வாய் சொந்தமாக ஆளுமே" சங் 95:1—11

நமது உடன்படிக்கை. (6) எனது சபை.

மே. 9. சபையின் அஸ்திபாரம் மத் 16 : 13—18.

10. சேவிக்கிற சபை அப் 6 : 1—7.

11. தனக்குள் பிரிந்திருக்கும் சபை 1 கொரி 1 : 1—18.

12. சுவிசேஷ பிரபல்ய சபை அப் 13 : 1—4

13. விசுவாசம் நிறைந்த சபை 1 தெச 1 : 1—10.

14. மகிமை பொருந்திய சபை எபே 5 : 24—32.

15. நமது உடன் படிக்கை (6) எனது சபை அப் 2 : 41—47.

நமது உடன் படிக்கை (7) கிறிஸ்தவ ஜீவியம்.

மே. 16. உடனடி கீழ்ப்படிதல் மத் 4 : 17—22.

17 தெய்வீக சுபாவத்தின் பங்காளிகள் 2 பேதுரு 1 : 1—8.

18. ஆவியின் கனிகள் கலா 5 : 16—26.

19. தலை சிறந்த குணம் (அன்பு) 1 கொரி 13 : 1—13.

20 "கனிகளால் அறிவீர்கள்" மத் 7 : 13—23.

21. முற்றிலுமாக (கிறிஸ்துவை) பின் பற்றுவோர் லூக் 9 : 57—62.

22. நமது உடன் படிக்கை (7) கிறிஸ்தவ ஜீவியம் 2 கொ. 6 : 12-18

நமது உடன்படிக்கை (8) நமது கடமைகளில் நாம் உண்மையுடன் இருப்பது.

மே 23. தினசரி கடமைகள் 2 கொரி 8 : 12—16

24. கடமை மாத்திரம் லூக் 17 : 5—10

25. கடமை தவறுதிருப்பது லூக் 12 : 37—48

26. அற்பகாரியங்களிலும் உண்மையுடனிருப்பது 2 ராஜா 5 : 1-16.

27. இயேசு தமது முகத்தை திருப்பினார் (எருசலேமுக்கு நோக்) லூக் 9 : 51—56

28. உண்மை பரிசு பெறுகிறது ஆதி 39 : 1—6

29. நமது உடன் படிக்கை (8) நமது கடமைகளில் நாம் உண்மையுடன் இருப்பது 1 கொரி 12 : 12—31.

பரிசுத்தாவியின் திரு நாள்
or
பெந்தே கோஸ்தே
} இயேசு ஜீவித்திருக்கிறார்—எப்படி?

30. வார்த்தையாக யோவ 1 : 1—14

31. அவரில் (நாம்) வெறும் ஐக்யத்தில் யோ 15 : 1—11

வேத வினாக்கள்

1. வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினபோது பரி. யோவான் எங்கே இருந்தார்?
2. இருபுறமும் கருக்குள்ள பட்டயம் யாருடைய வாயினின்று புறப்பட்டதாக சொல்லப்படுகிறது?
3. ஊரிம் தும்மீம் என்றால் என்ன?
4. தாவீது அதிகமாய் மதித்த எந்த வெகுமதியை கர்த்தருக்குச் செலுத்தினான்?
5. இஸ்ரவேலின் ரதமும், குதிரை வீரரும் என்று அழைக்கப்பட்டவர் யார்?
6. வேதாகமத்தில் காகங்களைப்பற்றி இரண்டு முக்கிய சம்பவங்கள் எவை?
7. சிவப்பு நூல் வேதத்தில் உள்ள எந்த கதையோடு சம்பந்தப்பட்டது?
8. சிப்போராள் யார்?
9. எங்கே, எப்போ மன்னா நின்றது?
10. தானியேலின் கல்தேய பெயர் என்ன?
11. மோசேயின் இரு குமாரரின் பெயர் என்ன?
12. கிறிஸ்து பிறந்தபோது ஆண்ட ரோம ராயன் யார்?

தொழில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

14 முதல் 18 வயது வரையுள்ள வாலிபர்கள் பின்வரும் தொழில்களைக் கற்கலாம்.

அச்சுவேலை, புஸ்தகம் கட்டுதல்
மின்சார, இயந்திர வேலைகள்
தச்சு வேலை

படிப்பு விபர விளம்பரத்திற்கு மதுரை ஜில்லா பசுமலைக் கைத்தொழில் பாடசாலை மானேஜருக்கு அணா 1 முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். சேர்க்கை விண்ணப்பம் ஜூன் மாதம் 15ம் தேதிக்குள் மானேஜருக்குக் கிடைக்கவேண்டும்

எல்லாத் தொழில்களையும் படிக்கவேண்டிய காலம் 3 அல்லது 4 வருஷமாகும் படிப்பதற்குச் சம்பளம் கட்டவேண்டியதில்லை. எல்லா மாணவருக்கும் சம்பளம் கொடுக்கப்படும். தச்சுவேலை கற்பதற்குக் குறைந்தது 5-ம வகுப்பாவது தேறியிருக்கவேண்டும். இயந்திரவேலை, மின்சார வேலை, அச்சுவேலை பயில்வதற்கு 8வது வகுப்பு வரையிலாவது 3-ம் பாரம் வரையிலாவது படித்த மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உண்மையோடும் உற்சாகத்தோடும் வேலை செய்கிற தகுதியுள்ள எளிய மாணவர்களுக்கு சம்பளத்துக்கு (Stipend) மேல் செல்லும் தங்கள் செலவைச் சம்பாதிக்கத் தோட்டவேலையாவது வேறு வேலையாவது கொடுக்கப்படும்.

தொழில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிழைப்பதற்கும் கடவுளுக்குத் தொண்டு செய்வதற்கும்
அதுவே சிறந்தவழி.

விளம்பரம்

வேத பாடசாலே, பசுமலே.

வருகிற ஜூன் மீ முதல் வேதப்பாடசாலேயின் அடியிற்கண்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கும் :—

1. இரண்டு வருட வேதாகம ஸ்திரீ வகுப்பு. குறைந்த பட்சம் 8ம் வகுப்பாவது படித்திருப்பது நல்லது. வயது 20க்கு மேல் இருக்கவேண்டும். குறைந்த படிப்பாயிருந்தாலும் அனுபவமும் திறமையுமுள்ளவர்கள் சேர விரும்பினுல் கவனிக்கப்படும்.

2. ஒரு வருட உபதேசிமார் வகுப்பு. 8ம் வகுப்பு பாஸ்பண்ணி போதனுமுறைப் பயிற்சியும் சபை அனுபவமும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். குறைந்த படிப்பாயிருந்தால் சபை அனுபவமும் திறமையும் வேண்டும்.

சேர விரும்புகிறவர்கள் தங்கள் தங்கள் வட்டகையிலுள்ள லோக்கல் கவுன்சில் தலேவர்கள் மூலமாய் மனுப்பண்ணலாம். அப்ளிக்கேஷன் பாரம் வேண்டியவர்கள் பசுமலே வேதப்பாடசாலேத் தலேவருக்குஎழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பரம்

சுற்றுக் கடிதம் 6

மதுரை ராமநாதபுரம் அத்யட்சாதீனம்,
பசுமலே வேதபாடசாலே
பசுமலே, மதுரை ஜில்லா,
ஏப்ரல் 1, 1955

'A Class' சுயேச்சை ஊழியருக்கு அழைப்பிதழ்

வேதபாடசாலே, பசுமலே, மே 10—13, 1955

அன்பார்ந்த நண்பர்களே,

உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறபடி நமது அத்தியட்சாதீனத்தின் ஏராளமான சபைகள், மேய்ப்பனின்றியும் ஞான ஆகாரமின்றியும் தத்தளிக்கிறூர்கள். நமது அத்தியட்சாதீனத்தில் சுமார் 600 சபைகள் உள்ள கிராமங்கள் இருந்ததும், ஒழுங்காய் ஆராதனே நடைபெறுவது சுமார் 350 கிராமங்களில் மாத்திரமே இப்பெருங் குறையை நிவர்த்திக்கச் சுயேச்சை ஊழியராகிய நீங்கள் சேவை செய்ய முன்வந்ததுபற்றிக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேம். உங்களுக்கும் அத்தியட்சாதீனத்தின் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேம்.

1949—55ல் உங்களுக்காகப் பல இடங்களில் கான்பரன்ஸ் நடத்தினேம். போன நான்கு வருஷங்களிலும் மே மாதந்தோறும், பசுமலேயில் நடந்த கூட்டத்திற்கும் உங்களில் சிலர் வந்தீர்கள். இக்கூட்டங்களில் பங்

கெடுக்காத ஏனைய நண்பரும் நமது பற்பல சபைகளில் ஆராதனை நடத்தி வருகிறார்கள். இப்படி ஒழுங்காய் ஆராதனை நடத்துவதற்குரிய சில பாடங்களையும், குறிப்புகளையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். தொடர்ச்சியாய் இப்படிப்பட்ட பயிற்சி கொடுக்கும் நோக்கத்தோடு உங்களுக்காக இந்த வருஷமும் மே மீ 10 மணி முதல் 13உ மதியம் வரை பசுமலையில் போதுக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்திருக்கிறோம் வேதப்பாடசாலை ஆசிரியரும் மற்றும் பிரமுகர்களும் உங்களுக்கு வேண்டிய பாடங்களைச் சொல்லித் தருவார்கள். இவ்வருஷப் பாடப் புத்தகமாக மறுபடியும் பரி. யோவான் சுவிசேஷத்தைப் படித்துக்கொண்டு வாருங்கள்.

இக்கூட்டங்களுக்குரிய பிரயாணச் செலவை நீங்களே பார்த்துக் கொள்ளவேண்டும். உங்கள் சாப்பாடு வசதியைக் கூடுமான வரையில் நாங்கள் கவனித்துக் கொள்வோம்.

நீங்கள் வரும்போது வேத புஸ்தகம், புகழ்மாலை, 80 பக்க நோட்டு, பென்சில், படுக்கை, தம்ளர் முதலியவை கொண்டுவரவும். ஆரம்ப முதல் கடைசி வரை இருக்கவும் வேண்டுகிறோம். வேத ஆராய்ச்சி, தியான முதலியவற்றோடு கீழ்க்கண்ட பாடங்களும் கற்பிக்கப்படும் :—

(1) ஆமோஸ், ஓசியா, யோவான், சுவிசேஷம்
(2) கிறிஸ்தவ வணக்கம்
(3) எபிரேயர், திருச்சபை சரித்திரம்
(4) கிறிஸ்தவ மதச் சித்தாந்தங்கள்.
(5) பிரசங்கக் குறிப்புகள்.
(6) சங்கீதம்
(7) சுகாதாரப் பாடங்கள்.

தொடர்ச்சியாய் இப்பயிற்சியில் பங்கு பெற்று ஒழுங்காய்ச் சபைகளில் சுயேச்சை ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு அத்தியட்சருடைய லைசென்ஸ் வழங்கப்படவேண்டுமென்ற ஒழுங்கு ஆலோசனை செய்யப்பட்டு அமுலுக்கும் வந்து விட்டது லைசென்ஸ் பெற்றவர்களையும் இக்கூட்டங்களில் முக்கியமாய் எதிர்பார்க்கிறோம்.

இக்கூட்டங்களுக்கு நீங்கள் தயவு செய்து வாருங்கள். ஏற்கனவே நீங்கள் வரும் தகவலை எங்களுக்குத் தெரிவித்தால், சாப்பாடு ஒழுங்கு செய்ய ஏதுவாகும். நீங்கள் வரும் தகவலைப்பற்றி உடனே பதில் எழுதக் கேட்கிறோம்.

கடவுள் உங்களோடுகூட இருப்பாராக!

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்புள்ள ஊழியர்

லெஸ்லி நியுபிகின், அத்தியட்சர்.

A. சாமுவேல் வேதப்பாடசாலைத் தலைவர்.

விளம்பரம்

1—6—'55 முதல் திண்டுக்கல் போர்டிங் பாடசாலைக்கு செகண்டரி கிரேடு பாஸ் பண்ணின ஆசிரியர் தேவை. அவர் Organ வாசிக்கத் தெரிந்தவராயுமிருக்க வேண்டும் சர்க்கார் சம்பள விகிதப்படி சம்பளமும் பஞ்சப்படியும் கொடுக்கப்படும். ஆலய ஆராதனைகளில் Organ வாசிப்பதற்காக ரூ 10/- பிரத்தியேகமாய் கிடைக்கும். திண்டுக்கல் கனம் தேவப்பிரகாசம் ஐயருக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

பந்தயக் கதைப்போட்டி

பரிசு வாங்க முன் வாருங்கள்! எல்லாரும் இதில் பங்கெடுக்கலாம்!

முதல் பரிசு	ரூ. 20
இரண்டாம் பரிசு	ரூ. 15
மூன்றாம் பரிசு	ரூ. 10
நான்காம் பரிசு	ரூ. 5

விதிகள்

1. இளைஞருக்குப் பொருத்தமான கதையாயிருக்கவேண்டும்.
2. கிறிஸ்தவ குணசீலம் என்ற பொருளின் மேல் கதை அமைந்திருக்கவேண்டும்.
3. தானே சுயேச்சையாய் எழுதுகிற கதையாயிருக்கவேண்டும். காப்பிபண்ணின கதையாயிருக்கக்கூடாது.
4. 1000 வார்த்தைகளுக்குமேல் எழுதக்கூடாது.
5. முழுக் காகிதத்தில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவாய் எழுதவும்
6. நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.
7. தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள் அத்தியட்சாதீனப் பத்திரிகை "சத்தியவர்த்தமானி"யில் பிரசுரிக்கப்படும்.
8. எல்லாக் கதைகளும் நூல் கழகத்திற்குச் சொந்தமாகும்.
9. கதைகளை "ஏ சாமுவேல் ஐயர், வேதப்பாடசாலைத் தலைவர், பசுமலை" என்ற விலாசத்திற்கு ஜூலை 1, 1955க்கு முன் அனுப்பிவைக்கவும்.

Lepox Press, Pasumalai 4—5—1955—481 C.